பக்கங்கள் 26+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 11 புதன்கிழமை 25.06.2024 | அதிர்வு 326

## இளைஞர்கள் இருவர் சுட்டுப் படுகொலை!

மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொரகொலயா பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிட்ட ஐ.நா. ஆணையாளர்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று பிற்பகல் ஹெலியூடாக வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் பிற்பகல் 4.30 மணியளவில் செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனித புதைகுழியைப் பார்வையிட்டார்.

சுமார் 30 நிமிடங்கள் வரையில் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிட்ட அவர், பல்வேறு தரப்புகளுடனும் கலந்துரையாடினார்.

## மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரும்

# ‘அணையா விளக்கு’ போராட்டக் களத்தில் ஐ.நா. ஆணையாளர்



## மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்




(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரிய ‘அணையா விளக்கு’ போராட்டக் களத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

04




### ‘அணையா விளக்கு’ போராட்டக் களத்தில்

# அமைச்சர் சந்திரசேகர், ரஜீவன் எம்.பி. மக்களின் எதிர்ப்பால் வெளியேறினர்

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ். செம்மணி மனிதப் புதை குழிக்குச் சர்வதேச நீதி கோரிய ‘அணையா விளக்கு’ போராட்டக் களத்துக்கு இன்று சென்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அஞ்சலி செலுத்திய நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களின் எதிர்ப்பால் அங்கிருந்து வெளியேறினார்.

பல்வேறு சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்புகளும் அஞ்சலி செலுத்திய நிலையில் இன்று பிற்பகல் 1.15 மணியளவில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் சுந்தரமூர்த்தி கபிலன் உட்படப் பலர் ‘அணையா விளக்கு’ போராட்டக் களத்துக்குச் சென்று அமைச்சர் சந்திரசேகருடன் சேர்ந்து அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது அமைச்சர் உள்ளிட்டவர்களை வெளியேறுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டனர். இதனால் குழப்பகரமான நிலை இடம்பெற்றது. அமைச்சர் பாதுகாப்பான முறையில் வெளியேற்றப்பட்ட நிலையில் அமைச்சரின் வாகனங்களுக்குக் கல்வீச்சு, தண்ணீர்ப் போத்தல் வீச்சு என்பனவும் இடம்பெற்றன.










# சி.வி.கேயும் செம்மணியில் அகௌரவப்படுத்தப்பட்டார்

## வருத்தம் தெரிவித்தார் சிறீதரன் எம்.பி.

கடந்த மூன்று தினங்களாக செம்மணியில் நடைபெறும் 'அணையா விளக்கு' போராட்டத்துக்குத் தொடர்ந்து வருகை தந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இன்று பகல் போராட்டத்தில் பங்குபற்றி விட்டு வெளியேறும் சமயம் ஒரு கும்பலினால் மோசமாகத் தூசித்து அகௌரவப்படுத்தப்பட்டார்.

கிளிநொச்சி அரசியல்வாதி ஒருவரின் அல்லக்கையாகச் செயற்படும் ஜீவராஜா (வட்டி ஜீவன்) என்பவரே முன்னின்று இந்த மோசமான செயலை முன்னெடுத்தார். அவரோடு வேறு ஒரு கும்பலும் சேர்ந்து கொண்டது.

தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் செயற்பட்டமைக்காகவும், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் போட்டியிட்டமைக்காகவும், கட்சியில் இருந்து ஜீவராஜா வெளியேற்றப்பட்டிருந்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போதும் கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சிக்கு எதிராக அவர் வேட்புமனுத் தாக்கல் செய்த போதிலும் அந்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையால் அவர் அந்தத் தேர்தலில் போட்டியிட வில்லை.

தமிழரசுக் கட்சி அவரைக் கட்சியை விட்டு நீக்கிய போதிலும், கட்சியின் மாவட்டக் கிளையைச் சார்ந்தோர் அவரை அரவணைத்து தங்கள் வேலைகளுக்காகப் பயனடுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக் கட்சி தலைமையிலான கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை தலைவரும், ஏனைய உறுப்பினர்களும் அண்மையில் வடக்கு ஆளுநரை சந்தித்தபோது அந்த அணியில் இதே வட்டி ஜீவனுக்கு முக்கிய முன்னணி இடம் வழங்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

அந்த வட்டி ஜீவன் மூலமே இன்று தமிழரசுக் கட்சியின் தலைவரை அகௌரவப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

செம்மணியில் இருந்து வெளியேறிய சி.வி.கே.சிவஞானமும், தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாணக்கியன் இராசமாணிக்கமும் பின்னர் மயிலிட்டியில் காணி விடுவிப்பை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்குபற்றிய சமயம் அங்கு வந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன் செம்மணியில் சி.வி.கே.சிவஞானத்துக்கு இடம் பெற்ற மோசமான அனுபவத்துக்காக வருத்தம் தெரிவித்தார். அதில் கிளிநொச்சி ஆள்கள் சில பேர் சம்பந்தப்பட்டமைக்காக தமது கவலையையும் அவர் கோரினார் என அறியவந்தது.

தேர்தலுக்கும் மற்றைய விடயங்களுக்கும் கிளிநொச்சி அரசியல் பிரமுகர்கள் பினாமியாக பயன்படுத்தும் வட்டி ஜீவன் செம்மணியிலும் அந்த வேலையைச் செய்துகொள்ளப் பயன்படுத்தப்பட்டார் என்ற சீற்றம் தமிழரசுக் கட்சி மட்டத்தில் நிலவுவதை அறியமுடிந்தது.

















## 'அணையா விளக்கு'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பிற்பகல் யாழ்ப்பாணமத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்ட பின்னர் அதற்கு அருகில் இடம்பெறும் 'அணையா விளக்கு' போராட்டக் களத்துக்குச் சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது மக்கள் செயல் அமைப்பினரால் 'அணையா விளக்கு' போராட்டத்தின் கோரிக்கைகள் தொடர்பான மகஜர் ஒன்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது.

## இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறந்த இருவரும் 30 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று இரவு மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

# கோடரியால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலை

## மட்டக்களப்பில் கொடூரம்

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு, கரடியனாறு பிரதேசத்தில் உள்ள வயல் ஒன்றில் கோடரியால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.



இந்தக் கொலை சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு – குசலானமலை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய வீரையா விஜயகாந் என்ற இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு, கொலை செய்யப்பட்ட இளைஞருக்கும் உறவினர் ஒருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின் போது சந்தேகனபரான உறவினர், சம்பவ இடத்தில் இருந்த இளைஞரின் தாயைத் தாக்கி காயப்படுத்திவிட்டு பின்னர் இளைஞரை கோடரியால் தாக்கிக் கொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற சந்தேகநபரைக் கைது செய்வது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏற்கனவே எச்சரித்திருந்தோம்!

இன்று செம்மணியில் நடைபெற்ற 'அணையா விளக்கு' போராட்டத்தின் போது இடம்பெற்ற மிக மோசமான – அசிங்கமான – கேவலமான – சம்பவங்கள் தொடர்பில் அப்படி இடம்பெறக் கூடும் என்பதை முற்கூட்டியே ஊகித்து 'முரசு' எச்சரித்து இருந்தது.

மூன்று நாட்களுக்கு முன்னர் ஞாயிற்றுக்கிழமை 22 ஜூன் 2025 'மாலை முரசு' நாளிதழின் ஆசிரிய தலையங்கம் இந்த விடயத்தை எச்சரித்து 'மிகுந்த அவதானம் தேவை' என்ற தலைப்பில் பிரசுரமாகக் இருந்தது.

வாசகர்களின் மீள் பார்வைக்காக அது இங்கு பிரசுரமாகிறது. இத்தகைய பெரும் போராட்டங்களை ஒழுங்கு படுத்துபவர்கள் இதற்கான ஏற்பாடுகள் செய்ய முடியாவிட்டால் அத்தகைய போராட்டங்களை நடத்தாமல் இருப்பது நல்லது. மக்களின் உணர்வுபூர்வமான போராட்டங்களை இவ்வாறு கொச்சைப் படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் போராட்டங்கள் நடைபெறாமல் அல்லது நடைபெறுகின்ற போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு தராமல் போகக்கூடிய மோச நிலைமை ஏற்படலாம்.

இந்தப் போராட்டத்தில் கேவலமாக நடந்து கொண்டவர்கள் பகிரங்கமாக அம்பலப்படுத்தப்படுவதோடு, பொது வாழ்வில் இருந்து தள்ளி வைக்கப்படவும் வேண்டும்.

மூன்று நாள்களுக்கு முன்னர் இந்த விடயத்தை எச்சரித்து 'மாலை முரசு' வெளியிட்ட ஆசிரியர் தலையங்கம் இங்கு இடம் பெற்றுள்ளது.

(ஆ – ர்)





# மிகுந்த அவதானம் தேவை

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப் பட்டவர்களுக்குச் சர்வதேச நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் மக்கள் செயல் என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் நாளை 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையில் செம்மணி வளைவுப் பகுதியில் 'அணையா விளக்கு' எனும் வெகுசனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையா விளக்கை முன்னிலைப்படுத்தியே இந்தப் போராட்டம் ஏற் பாட்டாளர்களால் நடத்தப்படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இருள் சூழ்ந்திருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்துக்கு ஒளி பாய்ச்சப்படல் வேண்டும் என்கின்ற குறியீட்டு அர்த்தத்தில் இந்தப் போராட்டத்தில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் எரியக்கூடிய அணையா விளக்கு ஏற்றப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் தமிழர் தேசம் ஒன்று திரண்டு திரட்சியாகப் பங்கு பற்றும் சூழ்நிலை உருவாகி வருகின்றது. அதே சமயத்தில் இந்தப் போராட்டத்தை ஒழுங்கு முறையோடும், கட்டுப் பாட்டோடும், உலகத்தின் கண்களைத் திறக்கும் வகையில் நேர்மைத் திறனுடனும் முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு ஏற்பாட்டாளர்களுக்கு ஒரு பொறுப்பாக இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும் புகிறோம்.

நாளை இலங்கை வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இந்தப் புதைகுழிப் பகுதிக்கு நேரடி யாக விஜயம் செய்து நிலைமையை பார்வையிடும் வாய்ப்புக் கிட்டி இருக்கிறது.

அதற்கான முழு ஒழுங்குபடுத்தலையும் செய்து தருவோம் என்று அரசாங்கமும் அறிவித்திருக்கிறது.

ஆனால் செம்மணிப் பிரதேசத்தை பார்வை யிடுவதற்கான களச்சூழல் இருந்தால் மட்டுமே அங்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் விஜயம் செய்வார் என்று அவரின் அலு வலகத்தின் சார்பில் இந்த விடயங்களை கையாளும் தரப்புகள் தெரிவிக்கின்றன.

ஆகையினால் ஆர்வக்கோளாறு காரணமாக எல்லை மீறி, ஒழுங்கு கடந்து செயற்பட்டு, வெண் ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழியை உடைத்த கதையான வேலையைச் செய்து விடக்கூடாது.

செம்மணிப் புதைகுழி விவகாரம் தனக்கு எதிராக – தன் படைகளுக்கு எதிராக – திரும்பக் கூடிய ஆபத்து இருப்பதை உணர்ந்துள்ள பௌத்த, சிங் களப் பேரினவாத அரசு அத்தகைய பிரதேசங்களை நேரடியாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பார்வையிடப் போகும்போது, விவகாரத்தை தமிழ் மக்களின் தலை மீது போட்டுக் குழப்பி அடிக்க வஞ்சகத் திட்டம் வகுக்கக்கூடும். அவற்றுக்குப் பலியாகாமல் இந்தப் போராட்ட நிகழ்வை கட்டுக்கோப் புடனும் ஒழுங்குடனும் நாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

செம்மணிப் புதைகுழி போன்ற விவகாரங்கள் ஏற்கனவே யுத்தப் பேரழிவினானல் நலிவுற்று ஆதங்கத்தில் மூழ்கி இருக்கும் தமிழர் சமுதாயத்தை இலகுவாக உணர்ச்சியைத் தூண்டக்கூடிய விடயங்களாகும். அதனைப் பயன்படுத்தி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அங்கு வருவதை குழப்புவதற்கும் அல்லது வரும் சமயத்தில் குழப்பங் களை ஏற்படுத்தி அதற்கான குற்றச்சாட்டுக்களை தமிழ்ப் போராட்டத் தரப்புகள் மீது சுமத்துவதற்கும் சதித்திட்டங்கள் வகுக்கப்படலாம்.

ஆகையால் 'அணையா விளக்கு' போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் சமூகத்துக்கு பதில் கூறக்கூடிய வர்களாக, கடும் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்கு முறையுடனும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்த வேண்டும். இல்லாவிட்டால் கைக்கு கிடைத்த வாய்ப்பைக் கோட்டை விட்டவர்களாகிவிடுவோம்.




# திருகோணமலையில் பாதிக்கப்பட்டோரின் குறைகளைக் கேட்டறிந்தார் வோல்கர் டர்க்

## பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முயற்சிப்போம் என்றும் அவர் உறுதி

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மாவட்டத்துக்கு இன்று முற்பகல் விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கை வரவேற்று, கவனவீர்ப்பு நடவடிக்கையைத் திருகோணமலை கல்லூரி வீதியில் அமைந்துள்ள யுபிலி மண்டபத்துக்கு முன்னால் பாதிக்கப்பட்ட மக்கள் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது பாதிப்புகளை பாதாகைகளில் படங்களின் மூலமாகவும் வாசகங்கள் மூலமும் காட்சிப்படுத்தியவாறு அமைதியான முறையில் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனைக் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்கள், வடக்கு – கிழக்கு சமூக இயக்கம், சிவில் அமைப் புக்கள் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது அந்த இடத்துக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கிடம் பாதிக்கப்பட்ட தரப்பினர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் வழங்கி அவருடன் உரையாடியிருந்தார்கள்.

இதன்பின்னர் கவனவீர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் தாங்கியிருந்த பதாதைகளை அவர்களிடத்தில் சென்று ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் பார்வையிட்டதுடன் தனது அன்பையும் வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கை அரசுடன் இணைந்து உங்களது பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்குவதற்கு நாம் முழுமையான முயற்சிகளை எடுப்போம் என்று இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தெரிவித்திருந்தார்.











# ஈழத் தமிழ் மக்களைக் கைவிட்டது போல் மலையகத் தமிழரையும் கைவிடாதீர்கள்!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் மனோ நேரில் வலியுறுத்து

"ஐ.நா. சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும், இலங்கையில் வாழும் ஈழத்தமிழ் மக்களைக் கைவிட்டு விட்டது. கொடும் யுத்தம் நடந்தபோது ஐநா சபை வடக்கில் இருந்து முன்னறிவித்தல் இல்லாமல் வெளியேறி, அங்கே சாட்சியம் இல்லாத யுத்தம் நடக்க காரணமாக அமைந்து விட்டது. இன்று யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகியும், கொலையானோர், காணாமல்போனோர் தொடர்பில் பொறுப்புக்கூறல் நடை பெறவில்லை. அரசியல் கைதிகள் பிரச்சினை முழுமையாக முடிவுக்கு வரவில்லை. யுத்தம் நடைபெற மூல காரணமாக அமைந்துள்ள இனப்பிரச்சினை தீர்வுக்கு வரவில்லை. ஆகவேதான், ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் ஐநா சபை தங்களை கைவிட்டு விட்டதாக நினைக்கின்றார்கள். ஈழத்தமிழ் மக்களை கைவிட்டதை போன்று, இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழ் மக்களையும் கைவிட்டு விட வேண்டாம் என உங்களைக் கோருகின்றேன்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் நேரடியாக தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க்கிற்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது:–



"இலங்கையில் மக்கள் மத்தியில் மிகவும் பின் தங்கிய பிரிவினராக வாழ்கின்றார்கள். காணி உரிமை, வீட்டு உரிமை, வறுமை, சிசு மரணம், சுகாதாரம். தொழில் நிலைமைகள் என்ற எதுவாக இருந்தாலும், அவை அனைத்திலும் மிகவும் குறை வளர்ச்சி கொண்ட மக்களாக இலங்கையில் வாழும் சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக மக்கள் குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் இருக்கின்றார்கள்.

சில வருடங்களுக்கு முன் இலங்கை வந்த ஐ.நா. விசேட அறிக்கையாளர் டொமொயா ஒபொகடா, தனது அறிக்கையில் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் காத்திரமாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையை அவர் உங்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் 51 ஆவது அவைக்குச் சமர்ப்பித்தார். அதை கவனத்தில் கொள்ளுமாறு உங்களைக் கோருகின்றேன்.

இலங்கையைப் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்போது, தவறாமல் இலங்கையின் வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் மலையக மக்கள் குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் படி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் நான் உங்களை மேலும் கோருகின்றேன்.

இலங்கையில் வாழும் மலையக மக்கள் இன்னமும் முழுமையான குடிமக்களாக இந்நாட்டில் வாழ வில்லை. இரண்டாம் தர பிரஜைகளாகவே வாழ்கின்றார்கள். காணி உரிமை உட்பட உரிமைகள் உரித்தாகும் போதுதான், அவர்களது குடி உரிமை முழுமை அடையும். அதை ஐநா சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்."

– என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# யுத்தத்தால் நிதி நெருக்குவாரம்

'தென்னையில் தேள் கொட்டினால் பனையில் நெறி கட்டுவது' என்பார்கள். அப்படி இருக்கின்றது மத்திய கிழக்கு மோதல் விவகாரம் இலங்கையில் ஏற்படுத்தி வரும் தாக்கம்.

இஸ்ரேல் - ஈரான் மோதல் உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலைகளை உயர்த்துகிறது. அத்தோடு மறுபுறத்தில் அமெரிக்க டொலரை மேலும் வலுப்படுத்துகிறது. இது ஒருபுறம் இலங்கையின் எரிபொருள் இறக்குமதி செலவை நேரடியாக உயர்த்தும் அதேசமயம், மறுபுறம் இலங்கை ரூபாவின் பெறுமதியை பலவீனப்படுத்துகின்றது என்று முக்கிய ஆய்வு நிறுவனம் ஒன்று இப்போது தகவல் வெளியிட்டிருக்கின்றது.

எண்ணெய் விலையில் ஏற்படும் ஒவ்வொரு அமெரிக்க டொலர் விலை உயர்வும் இலங்கையின் வருடாந்த இறக்குமதிச் செலவில் ஐந்து கோடி முதல் ஏழு கோடி அமெரிக்க டொலர் சுமையை ஏற்றுகின்றது என அந்த நிறுவனம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இஸ்ரேல் - ஈரான் மோதலில் விளைவாக உள்ளூர் எரிபொருள், போக்குவரத்து மற்றும் உணவுச் செலவுகள் அதிகரித்து வருகின்றன என்றும், இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை உயர்ந்து வருகின்றது என்றும், நுகர்வோர் விலைகள் குறுகிய காலத்தில் 0.5 முதல் 1.2 சதவீதம் வரை அதிகரிக்கும் என்றும் அந்த ஆய்வறிக்கை குறிப்பிட்டது. அத்தோடு ஓகஸ்ட் 2025 இல் முதன்மை பணவீக்கம் நான்கு முதல் ஐந்து சதவீதத்தை எட்டக் கூடியவாறு எகிறும் என்றும் அந்த ஆய்வறிக்கை எதிர்வு கூறியிருக்கின்றது.

எரிபொருள் விலைகள் அதிகரிப்பதால், எரிசக்தி சார்ந்த செலவின் அழுத்தங்கள் தீவிரமடையும். இதனால் போக்குவரத்து, உற்பத்தி மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் கட்டணங்கள் உயரும். விநியோகச் சங்கிலிகளில் ஏற்படும் இடையூறுகள் சரக்கு மற்றும் காப்பீட்டு செலவுகளையும் அதிகரிக்க வைக்கும். இதனால் உணவு, மருந்து மற்றும் உரங்கள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான செலவினம் உயரும். பிளாஸ்டிக் மற்றும் ஜவுளி போன்ற உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் விலைகளும் எகிறும். சம்பந்தப்பட்ட வணிகங்கள் இந்தச் சுமையை நேரடியாக நுகர்வோர் மீது - பொதுமக்கள் மீது - சுமத்தப் போகின்றன என அந்த அறிக்கை சுட்டுகின்றது.

எழக் கூடிய இந்த நெருக்கடியை அரசு எப்படிச் சமாளிக்கப் போகின்றது? இவ்விடயத்தை ஒட்டி வரும் 30 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அரசாங்கம் தனது நிதி மூலோபாயம் குறித்து சிறப்பு அறிவிப்பை வெளியிட உள்ளதாக அவைத் தலைவர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவா அல்லது பொருளாதார மேம்பாட்டு துணை அமைச்சர் அனில் ஜெயநாத்தா நாடாளுமன்றத்தில் வெளியிடுவர் என்பது இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, நிதி நிலைமை குறித்து ஒத்திவைப்பு விவாதம் நடத்த கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். விவாதம் அன்று காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 4:30 மணி வரை ஆறரை மணி நேரம் நீடிக்கும்.

அதில் இந்த நெருக்கடியை நாடு எதிர்கொள்வது தொடர்பான அரசின் திட்டங்கள் பற்றிய கொள்கை முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.





### தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன்

# செட்டிகுளம் பிரதேச சபையை கைப்பற்றியது ரிஷாத் தரப்பு!

### உப தவிசாளராக தமிழரசு உறுப்பினர் போட்டியின்றித் தெரிவு

(கி.வசந்தன்)

வவுனியா வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் ரிஷாத் தரப்பு உறுப்பினர் தாஜுதீன் முகமது இம்தியாஸ் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தேவசகாயம் சிவனாந்தராசா உப தவிசாளராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர தெரிவு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி தலைமையில், சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று மாலை நடை பெற்றது.

இதன்போது தவிசாளர் தெரிவைப் பகிரங்கமாக நடத்துமாறு 12 உறுப்பினர்களும், இரகசியமாக நடத்துமாறு 6 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர். பெரும்பான்மை வாக்குகளின் அடிப் படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

அந்தவகையில் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இம்தியாஸுக்கு ஆதரவாக 11 வாக்குகளும், தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட தாவீது இசையாஸ் மிராலுக்கு 6 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

இதனடிப்படையில் முகமது இம்தியாஸ் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு ஆதரவாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூன்று உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இரண்டு உறுப்பினர்ளும், ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தேவசகாயம் சிவானந்தராசாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

உப தவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தேவசகாயம் சிவானந்தராசா அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவர் தவிசாளர் தெரிவின் போது வெளிநடப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.














# மன்னாரில் இன்று அதிகாலை வேளை தந்தை செல்வாவின் சிலை உடைப்பு!

## சந்தேகத்தில் ஒருவர் கைது

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நகர மத்தியில் மாவட்ட செயலகத்துக்கு முன் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலை இன்று புதன்கிழமை அதிகாலை ஒரு கும்பலால் உடைக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை முக்கியஸ்தர்கள் இன்று காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தந்தை செல்வாவின் உருவச் சிலையில் காணப்பட்ட அவரது தலை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் அவரது சிலைக்கு அருகில் இருந்து தலைப் பாகம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தை அறிந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளுராட்சி சபை உறுப்பினர்கள், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.








# முசலி பிரதேச சபை ஆட்சி தேசிய மக்கள் சக்தி வசம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டம், முசலி பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தைத் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

முசலி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தலைமையில் முசலி பிரதேச சபையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கியாதியன் சாயு நலீம் மற்றும் தொழிலாளர் கட்சி உறுப்பினர் முகமது காமில் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதையடுத்துச் சபையில் உள்ள 16 உறுப்பினர்களும் கலந்துகொண்டு பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.



இதன்போது தொழிலாளர் கட்சி உறுப்பினர் முகமது காமில் 7 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கியாதியன் சாயு நலீம் 9 வாக்குகளையும் பெற்றனர்.

அதிகூடிய வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கியாதியன் சாயு நலீம் முசலி பிரதேச சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, சுயேச்சைக் குழு, ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஆதரவை வழங்கியிருந்தன. உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அப்துல் ரசீது தன்ஸீல் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முஷாரபின் இணைவுக்கு எதிர்ப்பு;

# மு.காங்கிரஸின் நிகழ்வை புறக்கணித்த உறுப்பினர்கள்!

(அபு அலா )

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் முதுநபீன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் உத்தியோக பூர்வமாக இணைந்து கொள்ளும் நிகழ்வு இன்று (25) சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை உள்ளிட்ட கட்சியின் அம்பாறை மாவட்ட உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நாளை மறுதினம், 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் தெரிவு இடம்பெறவுள்ள நிலையில் இந்த இணைவு இடம் பெற்றது.




கடந்த தேர்தல் காலங்களில் கட்சியையும், கட்சியின் சார்பாகக் களமிறங்கிய வேட்பாளர்களையும், கட்சியின் தலைமையையும் மிக மோசமான முறையில் விமர்சித்து வந்த முஷாரபுடன் நாங்கள் ஒருபோதும் இணைந்து செயற்பட மாட்டோம் என்று முஸ்லிம் காங்கிரஸில் தெரிவாகிய 5 உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளாது தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீம், பொத்துவில் பிரதேச சபைக்கு தெரிவாகிய முஸ்லிம் காங்கிரஸினுடைய 5 உறுப்பினர்களையும் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அப்துல் வாஸித் மற்றும் மத்திய குழு உறுப்பினர்களையும் இன்றைய கூட்டத்துக்கு கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்ற அழைத்திருந்த போதிலும் அனைவரும் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஷாரபின் இணைவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று புறக்கணித்த 5 பேரும் எதிர்வருகின்ற 27 ஆம் திகதி தவிசாளராக தெரிவு செய்யப்படவுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரபை நாங்கள் ஆதரித்து வாக்களிக்கமாட்டோம் என்ற ஒருமித்த கருத்தையும் கட்சிக்கும் கட்சியின் தலைமைக்கும் தெரிவித்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




# காரைதீவு பிரதேச சபை மீண்டும் தமிழரசு வசம்

## தவிசாளராக பாஸ்கரன் தெரிவு

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டம், காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராக இலங் கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சுப்பிர மணியம் பாஸ்கரன் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

அதன்படி காரைதீவு பிரதேச சபை யின் 4 ஆவது தேர்தலில் 5 ஆவது தவிசாளராக சு.பாஸ்கரன் 8 வாக்கு களைப் பெற்று தெரிவாகியுள்ளார்.

உப தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பினர் ஏ.எச்.எம்.இஸ்மாயில் பகிரங்க வாக்களிப்பின் மூலம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காரைதீவு பிரதேச சபையின் தவி சாளர், உப தவிசாளர் தெரிவுக் கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச சபைக்காக நடை பெற்ற 4 ஆவது தேர்தலின் மூலம் தெரிவான 11 உறுப்பினர்களிடையே இந்தத் தெரிவு நடைபெற்றது.

தவிசாளர் தெரிவுக்காக இரகசிய வாக்கெடுப்பா? பகிரங்க வாக்கெடுப்பா? என்ற விவாதத்தில் சுமார் அரைமணி நேரம் சென்றது.

தவிசாளரின் பெயரை முன்மொழியு மாறு ஆணையாளர் அஸ்மி கேட்டுக் கொண்டார்.

அங்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சு.பாஸ்கரனின் பெயரை தமிழரசு உறுப்பினர் கே.ஜெய சிறில் முன்மொழிய மு.கா. உறுப்பினர் இஸ்மாயில் வழிமொழிந்தார்.

மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் திருமதி கிருஷ்ணபிள்ளை செல்வராணியை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அபூபக்கர் பர்ஹாம் முன் மொழிய தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் சுலஸ்தனா வழிமொழிந்தார்.

தவிசாளர் தெரிவை பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடத்துவது எனச் சபையில் உள்ள 8 உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்ததற்கமைவாக பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பின்போது பாஸ்கரன் 8 வாக்குகளைப் பெற்றுக்கொண்டாரா. செல்வராணி 2 வாக்குகளைப் பெற்றார். பர்ஹாம் நடுநிலை வகித்தார்.

அதன்படி காரைதீவு பிரதே சபையை 4 ஆவது தடவையாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்று தவிசாளர் பதவியைத் தக்கவைத்துக்கொண்டது.

அடுத்து உப தவிசாளர் தெரிவு புதிய தவிசாளரின் அனுமதியுடன் ஆணையா ளர் தலைமையில் நடைபெற்றது.

உப தவிசாளர் பதவிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பி னர் எம்.எச்.எம்.இஸ்மாயிலின் பெயர் முன்மொழியப்பட்டது. வேறு பெயர் முன்மொழியப்படாமையினால் இஸ்மா யீல் உப தவிசாளராகத் தெரிவு செய்யப் பட்டார்.










### சுயேச்சைச் குழுவின் ஆதரவுடன்

# நாவிதன்வெளி பிரதேச சபையை கைப்பற்றியது தமிழரசுக் கட்சி!

### தவிசாளராக ரூபசாந்தன் தெரிவு



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டம், நாவிதன் வெளிபிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக் கூட்டம் இன்று காலை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஎல்எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

அதன்போது தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இ.ரூபசாந்தனும், உப தவிசாளராக வண்டில் சின்ன சுயேச்சைக் குழுவின் தலைவர் கு.புவனரூபனும் தெரிவு செய்யப்பட்டார்கள் .பிரதேச சபை மண் டபத்தில் நடைபெற்ற தெரிவுக் கூட்டத்தில்

தவிசாளர் தெரிவுக்கு அழைத்த போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் இ.ரூபசாந்தனும், தேசிய மக்கள் சக்தி சார்பில் எஸ்.நிரோஷனும் போட்டியிட்டார்கள்.

ரூபசாந்தன் 8 வாக்குகளும், நிரோஷன் 5 வாக்குகளும் பெற்றனர். அதற்கமைய ரூபசாந்தன் தவிசாளரானார்.

உப தவிசாளர் தெரிவில் சுயேச்சை சார்பில் நளீரும், வண்டில் சின்னச் சுயேச்சைக் குழு சார்பில் புவனரூபனும் போட்டியிட்டனர் .

அங்கும் எட்டுக்கு ஐந்து என்ற அடிப் படையில் வண்டில் சின்ன சுயேச்சைக் குழுத் தலைவர் புவனரூபன் உப தவிசாளரானார். சபையில் 13 உறுப் பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாவிதன்வெளி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க அங்கு போட்டியிட்ட வண்டில் சின்ன சுயச்சைக் குழு இணக்கம் தெரிவித்திருந்தது.



# வெலிசர கடற்படை மருத்துவ மனைக்கு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கல்

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

இலங்கை மருத்துவமனை சேவைகள் கவுன்சிலின் இயக்குநர் வணக்கத்துக்கு உரிய சாஸ்திரபதி பண்டித ராஜவெல்லே சுபூதி தேரரின் தலைமையிலான சமூக சேவை திட்டத்தின் கீழ், மருத்துவமனை உபகரணங்கள் வெலிசரவில் உள்ள இலங்கை கடற்படையின் பொது மருத்துவ மனைக்கு மருத்துவமனை வளாகத்தில் வைத்து நன்கொடையாக வழங்கப்பட்டன.

அதன்படி, இந்த சமூக சேவை திட்டத்தின் கீழ் கடற்படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மருத்துவமனை உபகரணங்களால், வெலிசறை கடற்படை பொது மருத்துவமனை மற்றும் பிற கடற்படை கட்டளை மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும், ஓய்வுபெற்ற கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் சிறந்த மருத்துவ சேவைகளை வழங்க கடற்படைக்கு இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கடற்படை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ரியர் அட்மிரல் ஜனக மாரபே, மேற்கு கடற்படை கட்டளை மற்றும் வெலிசரை கடற்படை தளத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டது.






# கம்யூனிஸ்ட் தலைவர் சண்முகதாசனின் நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும்!



இலங்கைப் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடித் தலைவரான தோழர் என். சண்முகதாசனின் 105 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நினைவுப் பேருரையும், அவரின் நூற்றாண்டு மனப் பதிவு நூல் வெளியீடும் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் சி. மௌனகுரு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல்துறை விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் “கொந்தளிப்பான சர்வதேச நிலைவரமும் இலங்கைக்கான மார்க்கமும்” எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் என். சண்முகதாசன் அணியில் நீண்ட காலம் செயற்பட்ட மூத்த தோழர் எம். ஏ. சி. இக்பால் நூலை வெளியிட்டு வைப்பார்.

எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் நூல் அறிமுக உரை நிகழ்த்துவார்.

சண்முகதாசனின் நூற்றாண்டை முன்னிட்டு 2020 ஜூலையில் கலாநிதி தயான் ஜெயதிலக, ராஜன் பிலிப்ஸ், கலாநிதி சரத் அமுனுகம, பத்திரிகையாளர்கள் மனிக் டி சில்வா, டி.பி.எஸ். ஜெயராஜ், வீரகத்தி தனபாலசிங்கம், பேராசிரியர்கள் என். சண்முகரத்தினம், மௌனகுரு ஆகியோர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூலான “சண்முகதாசன் நூற்றாண்டு மனப் பதிவுகள்” (தமிழிலும் ஆங்கிலத்திலும்) நூல் வெளியிட்டு வைக்கப்படும்.

இந்த நிகழ்வை மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.



# கல்கிசை - தெஹிவளை மாநகர முதல்வர் தெஹிவளை வெங்கடேஸ்வர ஆலயத்தில்

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் இருந்து தெரிவான தெஹிவளை-கல்கிசை மாநகர சபை முதல்வர் பெரகும் சாந்த, ஒரேயொரு தமிழ் உறுப்பினரான திருமதி யாழினி ராஜேந்திரன் உட்பட மாநகர சபையின் ஏனைய உறுப்பினர்களும் தெஹிவளை வெங்கடேஸ்வர மகா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.



# மட்டு நகரில் வீதி கடவையில் கடந்தவர் ஓட்டோவுடன் மோதுண்டு உயிரிழந்தார்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு – திருகோணமலை வீதி மெதடிஸ் தேவாலயத்திற்கு அருகிலுள்ள வீதி பாதசாரி கடவையில் கடக்க முற்பட்டவரை ஓட்டோ மோதிய விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆண் ஒருவர் சிகிச்சை பலனின்றி இன்று புதன்கிழமை உயிரிந்துள்ளார் என மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வந்தாறுமூலை களுவங்கேணியைச் சேர்ந்த 33 வயதுடைய புண்ணியமூர்த்தி புஷ்பாகரன் என்பவரே இவ்வாற உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை திகதி காலை 10 மணியளவில் திருகோணமலை வீதியில் உள்ள மெதடிஸ் தேவாலயத்துக்கு அருகிலுள்ள வீதி கடவை வெள்ளைக் கோட்டின் ஊடாக பாதசாரி ஒருவர் சைக்கிளில் கடக்க முற்பட்டபோது வேகமாக பிரயாணித்த ஓட்டோ அவருடன் மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

இந்த நிலையில் இந்த விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலன் இன்று இன்று புதன்கிழமை (25) அதிகாலையில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழர்களைக் குற்றவாளிக் கூண்டில் ஜனாதிபதி நிறுத்துவதை ஏற்கமுடியாது

## அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவிப்பு

(ப.சதீசன்)

ஜனாதிபதி, தமிழர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதை ஏற்க முடியாது என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று (24) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தையிட்டி விகாரைப் பிரச்சினையை அரசியல் கண்ணோக்கில் பார்க்கக் கூடாது. பிரஜைகளுக்கும், விகாரைக்கும் இடையிலான பிரச்சினையாக மாத்திரம் பார்த்தால் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம்.

அகற்றினால் பிரச்சினை வரும் என அண்மையில் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய ஆலோசனை குழு கூட்டத்தில் ஜனாதிபதி கூறியிருப்பது அவரது தனிப்பட்ட கருத்து மட்டுமல்ல அவரது அரசின் நிலைப்பாடுமாக மட்டும் கணிக்க முடியாது.

அதனை சிங்கள பௌத்த நிலைப்பாட்டில், தமிழர்களை எச்சரிக்கும் தொனியாகவே நாம் கொள்ளலாம். அது மட்டுமல்ல அரச பயங்கரவாதம் சிங்கள பௌத்தத்தைக் கவசமாகக் கொண்டு, தமிழர் தேசத்தில் முன்னெடுக்கும் சட்டவிரோத சமய ஆக்கிரமிப்புகளுக்குத் திறந்த அனுமதிப் பத்திரமாகவே நாம் அடையாளப்படுத்த வேண்டும்.

இதுவா தேசிய மக்கள் சக்தியின் மாற்றத்தை நோக்கிய பயணம்? என இன நல்லிணக்கத்தையும் அரசியல் நீதியையும் விரும்பும் மக்கள் அமைப்புகள் தமது ஆதங்கத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தல் வேண்டும்.



தையிட்டியில் அரசியல் நோக்கம் கொண்ட அரச பயங்கரவாத இராணுவத்தால் சட்ட விரோத விகாரையினை சிங்கள பௌத்த பேரினவாத அரசின் துணையோடு வெற்றி அடையாளமாகவே கட்டி எழுப்பப்பட்டுள்ள நிலையில் அரசியல் நோக்கில் பார்க்க வேண்டாம் எனக் கூறி ஜனாதிபதி தமிழர்களை குற்றவாளி கூண்டில் நிறுத்துவதை ஏற்க முடியாது.

தற்போதைய ஜனாதிபதி நாட்டின் அமைதியையும் நல்லிணக்கத்தை விரும்பினால் முதலில் நாட்டின் நடைமுறை சட்டங்களை மீறி தமிழர்களின் சுமுக வாழ்வை சீர்குலைக்கும் நோக்கில் கட்டப்பட்டுள்ள விகாரை தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களிடமும் நடந்து முடிந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

“விகாரைப் பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம்” எனக் கூறும் ஜனாதிபதி சிங்கள பௌத்த அரசியலை மையப்படுத்தி அந்த விகாரை பிரதேசத்தில் வேறெந்த கட்டடங்களோ அல்லது சிங்கள குடியேற்றங்களோ உருவாக்க மாட்டோம் என உறுதி கூறாது தவிர்த்து ஏன்? அந்தப் பிரவேசத்தில் தமிழர்களின் வாழ்வுக்கும் பாரம்பரிய கலாச்சாரத்துக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் எத்தனையும் செய்ய மாட்டோம் என்று உறுதி கூறாதது ஏன்? அதேபோன்று மாதந்தோறும் பௌர்ணமி தினங்களில் இறக்குமதி செய்யப்படும் சிங்கள பௌத்தர்களை குறித்து வாய் திறக்காது ஏன்?.

கடந்த கால நாட்டின் தலைவர்களைப் போலவே தற்போதைய ஜனாதிபதியும் பௌத்த விழாக்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவற்றில் பங்கேற்று சிங்கள பௌத்த மக்களை திருப்திப்படுத்தும் அரசியலை முன்னதத்தை தமிழர்களை குற்றவாளிகளாக்கி அரசியல் கொலைக்கு உட்படுத்த முனைவது நாட்டின் எதிர்கால நலனையே பாதிக்கும்.

தமிழர் தாயகத்தில் கண்டுபிடிக்கப்படும் சமூக புதைகுழிகள் இனப்படுகொலைக்கு சாட்சியாக உள்ளது போன்று சிங்கள பௌத்த தமிழின அழிப்புக்கு சாட்சியாக தையிட்டி விகாரை எழுந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையர் வருகையோடு இடம்பெறுகிறது அணையா விளக்கு போராட்டம். இனப்படுகொலைக்கு எதிராக தமிழர் தேசம் என்றும் விரிவடைய வேண்டும். அதேபோன்று சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு எதிராக நடைபெறும் பௌர்ணமி போராட்டமும் மக்கள் மயமாக வேண்டும். அதுவே தமிழர் தாயக அரசியலை நோக்கி மக்கள் மீள் எழ வழி சமைக்கும் எனலாம்.

அதிகார கதிரைகளுக்குள் அரசியலை தேடிக்கொண்டிருக்கும் சக்திகள், மக்கள் அரசியலைப் பலப்படுத்தி முன்னோக்கிச் செல்ல அணையா விளக்கு போராட்டமும், பௌர்ணமி போராட்டமும் விடுக்கும் அழைப்பை ஏற்கா விடின் அதற்கான தீர்ப்பை மக்கள் வழங்குவர்.- என்றுள்ளது.



# சட்டவிரோத கடற்றொழில்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கடற்றொழில் அமைப்புகளுடன் பேச்சு!

## ரவிகரன் எம்.பி. சந்திப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சமேளனம் மற்றும், யாழ். மாவட்ட கிராமிய சம்மேளனம் என்பவற்றின் பிரதிநிதிகள் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. முல்லைத்தீவு – தீர்த்தக்கரைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வட பகுதிக் கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பேசப்பட்டது.

அண்மையில் முல்லைத்தீவு காணாமல் போன மீனவர் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டாளர்களால் கொல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலையில், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை முற்றாகத் தடைசெய்வதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இதன்போது யாழ். கடற்றொழில் அமைப்பினரால் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை முற்றாகத் தடை செய்வது தொடர்பில் தம்மாலான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.






# சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய வர்த்தக நிலையங்களுக்குச் ‘சீல்’!

## உரிமையாளர்களுக்கு 66,500 ரூபா தண்டம்

(பா. சதீசன்)

மாங்குளம், திருமுறுகண்டிப் பகுதிகளில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய வர்த்தக நிலையங்களுக்குச் ‘சீல்’ வைக்கப்பட்டுள்ளது. காலாவதியான மற்றும் வண்டு பிடித்த உணவுப் பொருள்கள் வைத்திருந்த வர்த்தகர்களுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 66 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வைத்திய அதிகாரிகள் டாக்டர் பகீரதன், டாக்டர் சஞ்சீவன் ஆகியோரின் ஆலோசனையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் உணவு கையாளும் நிலையங்கள், பூட் சிற்றிகள், பலசரக்கு வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் நதிருசன் தலைமையில் முத்துஐயன்கட்டு பொதுச் சுகாதார பரிசோதகர் லோஜிதன் மற்றும் ஒட்டுசுட்டான் பொதுச் சுகாதார பரிசோதகர் டிலக்சன் உள்ளிட்ட குழுவினரால் மாங்குளம் மற்றும் திருமுறுகண்டி பகுதியில் உள்ள பலசரக்கு கடைகள் மற்றும் உணவகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இதன்போது சுகாதார குறைபாடுகளுடன் மற்றும் புழுப்பிடித்த , வண்டு பிடித்த பொருள்கள் மற்றும் திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்காக வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து இந்தப் பொருள்களை மீட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் உணவகங்கள் மற்றும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேலதிக நீதிவான் உணவக உரிமையாளர்கள் மற்றும் கடை உரிமையாளர்கள் குற்றவாளிகளாக இனங்கண்டு மொத்தமாக 66 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்ததுடன் திருமுறுகண்டி பகுதியில் உள்ள மூன்று கடைகளில் காணப்பட்ட சுகாதார சீர்கேடுகளை நிவர்த்தி செய்யும்வரை மூடுமாறும் உத்தரவிட்டார்.



# இடமாற்ற சபையின் அனுமதியின்றி ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கல்!

## நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கவும் முடிவு என்கிறது ஒன்றிணைந்த கூட்டமைப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

ஹட்டன் கல்வி வலையத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான இடமாற்றம், இடமாற்ற சபையின் அனுமதியின்றி ஹட்டன் வலயக் கல்வி பணிப்பாளரால் வழங்கப்பட்டுள்ளது என்று ஹட்டன் கல்வி வலயத்தின் ஒன்றிணைந்த கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

ஹட்டனில் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தது.

இதன் போது அந்த அமைப்பின் உறுப்பினர்கள் மேலும் தெரிவிக்கையில், இந்த இடமாற்றம் காலம் தாழ்த்தி இடம்பெறுகிறது. கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி இடம் பெற்ற இடமாற்றம் இதுவரையில் இடம்பெறவில்லை. ஆறு மாத காலப் பகுதியில் இடமாற்றங்கள் இடம் பெறமால் இருந்த வேளையில் ஹட்டன் வலயக் கல்விப் பணிமனையில் உள்ளவர்கள் மாகாணத் திணைக்களத்துக்குப் பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லை என அறிவித்தலை விடுத்து, தேவையின் சேவை கருதி இது போன்ற முறையற்ற முறையில் இடமாற்றங்களை வழங்குகிறார்கள்.

இதுபோன்ற இடமாற்றங்கள், இடமாற்ற சபையின் அனுமதியோடு இடம்பெற வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். இதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ளாவிட்டால் எதிர்வரும் காலங்களில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, முறையற்ற முறையில் இதுவரையிலும் 48 இடமாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. இதுவரை காலமும் இரண்டாவது இடமாற்றத்தை வழங்க அதிகமான காலம் எடுத்திருக்கிறது. – என்று குறிப்பிட்டனர்

# கண்டக்குழி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவிகள் மாகாணத்துக்குத் தெரிவு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

புத்தளம் மாவட்ட மட்டத்தில் இடம் பெற்றுவரும் வலய மட்ட மெய்வல்லுனர் விளையாட்டு போட்டிகளில் கண்டக்குழி முஸ்லிம் மகா வித்தியாலய இரு மாணவிகள் ஈட்டி எறிதல் மற்றும் தட்டெறிதல் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் எம். பி. எம். ஜெசின் தெரிவித்தார்.

கண்டக்குழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி பயிலும் ஆர்.றீஹா 18 வயதின் கீழ் ஈட்டி எறிதல் மற்றும் தட்டெறிதல் போட்டியிலும் தரம் 12 இல் கல்வி பயிலும் எம்.எப். நப்ரீனா 20 வயதின் கீழ் ஈட்டி எறிதல் போட்டியிலும் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் எஸ். ஐ. எம். அம்ஜத், எம். அஹ்சப் ஆகிய இருவருக்கும் வெற்றிபெற்ற மாணவிகளுக்கும் பாடசாலைச் சமூகம் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.





# சாதனைக் கல்வியலாளர்கள், மாணவர் கௌரவிப்பு!

(மாளிகைக்காடு)

இலங்கை கல்வியியலாளர் சேவைக்கு உள்வாங்கப்பட்டவர்களையும், கல்வியலாளர்களையும், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களையும், பிபா சர்வதேச நடுவராக தெரிவு செய்யப்பட்ட ஏ.எம். ஜப்ரானையும் பாராட்டிக் கௌரவிக்கும் அல்–மீஸான் பௌண்டஷனின் "மரகதங்கள் சீசன் த்ரி" நிகழ்வுகள் அல்–மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்காவின் தவிசாளரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளருமான நூருல் ஹுதா உமர் தலைமையில் கல்முனை அல்– அஸ்ஹர் அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் நட்சத்திர அதிதியாக மாற்றத்துக்கான சர்வதேச பங்காளிகள் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்த்திட்ட ஆலோசகரும், அல்–மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்காவின் ஆளுநர் சபை உறுப்பினருமான இப்திகார் றிசாத் ஷெரீப்பும், கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்வி பணிப்பாளர்களான பி. ஜிஹானா ஆலீப், எம்.என்.ஏ. மலிக், எம்.எல்.எம். முத்தரிஸ், யூ.எல்.சாஜித், யூ.எல்.




றியால், அஸ்மா அப்துல் மலிக், ஏ. சஞ்சீவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விசேட அதிதிகளாகச் சமாதானக் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.எல். றியாஸ், பொறியியலாளர் கமால் நிஷாத், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விமான்கள், கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலய அதிபர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், அல்–மீஸான் பௌண்டஷனின் ஸ்ரீலங்காவின் ஆளுநர் சபை உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓய்வுபெற்ற அதிபர் யூ.எல். நஸார், கல்வியலாளர் சேவைக்கு கல்முனை பிராந்தியத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட எம்.ஐ.எம். அஸ்மி, ஏ.ராஸீக், ஏ.சி.எம். மபாஸ், எம்.ஆர்.எம். நௌசாத், எம்.ஏ. அஸ்வர், ஏ.எம்.கே. முபாரக், சிஹானா ஏ கரீம், பிபா சர்வதேச நடுவராக தெரிவு செய்யப்பட்ட ஏ.எம். ஜப்ரான் ஆகியோருடன் மாளிகைக்காடு பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.













# சோழன் சாதனை புரிந்த மூன்று வயதுச் சிறுவன்!

**(பழுவூரான்)**

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம், மக்கள் உதவி அறக்கட்டளையுடன் இணைந்து நடத்திய உலக சாதனை படைக்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை கல்லடி கிறீன் கார்டன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும், சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாநகர நகரபிதா சிவம் பாக்கியநாதன், துணை நகரபிதா வை.டினேஸ்குமார் மற்றும் மாநகரசபை உறுப்பினர்களான ச.பிறேமானந்தன், தனுச பிரதீப் ஆகியோரும், கௌரவ விருந்தினராக எழுத்தாளர் கவிமகள் ஜெயவதியும் கலந்து கொண்டனர்.

இதன்போது சோழன் சாதனை புரிந்த மட்டக்களப்பின் மூன்று வயதுச் சிறுவன் பிரசாத் பவிஷ் அதிதிகளால் சோழன் நினைவுப் பதக்கம், அடையாள அட்டை, சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னம் ஆகியன வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் 150 பொது அறிவுக் கேள்விகளுக்கு விடையளித்தல், 50 சொற்களுக்கான ஒத்த சொற்கள், 50 சொற்களுக்கான எதிர்ச் சொற்கள், 30 சமஸ்கிரதச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள் போன்றவற்றை மிகவும் குறைந்த நேரத்துக்குள் கூறி சோழன் உலக சாதனை படைத்தார். இவருக்கு அரங்கம் நிறைந்த அறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடக வியலாளர்கள் தமது வாழ்த்தைப் பதிவு செய்தனர்.

இந்த நிகழ்வில் சோழன் புத்தக நிறுவனத் தலைவர் முனைவர் நீலமேகன் நிமலன் காணொளி வாயிலாக இந்தியாவிலிருந்து இணைந்து தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.



# சிறைக் கைதிகளின் புனர்வாழ்வுக்கு புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன

**(த.சுபேசன்)**

யாழ்ப்பாணம் சிறைக் கைதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக ஒரு தொகை புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எலிபன்ற் எயிட் ஹெல்பிங் கியூமன் அமைப்பின் நிதிப் பங்களிப்பின் மூலம் இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மான் இறைச்சி வைத்திருந்த இரண்டு பேர் கைதாகினர்!

(மஸ்கெலியா )



சட்டவிரோதமாக மான் இறைச்சி வைத்திருந்த இருவரை நல்லதண்ணி வனத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள நல்லதண்ணி தோட்டத்தை சேர்ந்த ராமையா சந்திரபாபு, ஜெகநாதன் பெரியசாமி ஆகியோரே என்று வனத் துறை அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஹட்டன் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டவேளை, தங்கள் மான் இறைச்சி வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். அதற்கான வழக்கு ஜுலை 18 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# அரச அலுவலகங்களில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆராய்வு!

(றிஸ்வான் சாலிஹூ)

அரச கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

அதன் அடிப்படையில், அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில் இந்தச் செயற்றிட்ட வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆரம்பக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் ஏ.ஜனூர்தீன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரி கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர் பிரதிநிதிகள், ஆலோசனைச் சபை உறுப்பினர்கள உட்பட பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இந்தச் செயற்றிட்டக் கருத்திட்டக்களை நடைமுறைப்படுத்துவதற்கான உபகுழுக்களும் இதன்போது தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# கற்பிட்டி வைத்தியசாலைக்கு பைசல் எம்.பி. கள விஜயம்!





(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி பிரதேச சபையின் உப தலைவர் எச். எம். சமன் குமார ஹேரத்தின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான எம்.ஜே.எம். பைசல் கற்பிட்டி வைத்தியசாலைக்கு கள விஜயம் மேற்கொண்டார். வைத்திய சாலையின் குறைபாடு மற்றும் தேவைப்பாடுகள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கற்பிட்டி வைத்தியசாலையின் முழுமையான அபிவிருத்தி தொடர்பான விஷேட கூட்டம் ஒன்றும் விரைவில் கூட்டப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# டிரம்பின் தந்திரோபாய போர் நிறுத்தம்! இஸ்ரேல் – ஈரான் இணங்க சாத்தியமா?

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா.**

(வாஷிங்டன் அரசு ஈரானுடன் சண்டையிடவில்லை, அதன் அணுசக்தி திட்டத்துடன் மட்டுமே போராடுகிறோம் போன்ற அறிக்கைகளை பார்த்தால் அமெரிக்க தற்போதைய போர் விவகாரத்தில் அழுத்தமாக காலடி எடுத்து வைக்க முடியவில்லை – அல்லது விரும்பவில்லை என்றே தோன்றுகிறது.)

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே முழு அளவிலான போர் நிறுத்த இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்திருக்கிறார்.

தீவிரமாக ஏவுகணை தாக்குதல்களை நடத்திய இரு நாடுகளுக்கும் இடையேயும் அடுத்த சில மணி நேரங்களில் நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தப் போர் ஓய்வு பன்னிரண்டு மணித்தியாலங்கள் நீடிக்கும் என்று அவர் தனது சமூகவலைத் தளப் பதிவில் நேற்றுக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதனை உறுதிப்படுத்தும் வண்ணம், இரண்டு நாடுகளும் இதற்கு இணங்கியிருக்கின்றன என்று அமெரிக்க நிர்வாகத்தின் உயர் அதிகாரி ஒருவர் செய்தி நிறுவனங்களிடம் கூறியுள்ளார். ஆனால் இஸ்ரேலிடம் இருந்து எந்த வித அறிவித்தலும் இன்னமும் வெளியாகவில்லை.

அதேவேளை இஸ்ரேல் அதன் தாக்குதல்களை நிறுத்தினால் பதிலடிகளைத் தொடர வேண்டிய நோக்கம் ஈரானுக்கு இல்லை என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

### வாஷிங்டனின் தந்திரோபாய போர் நிறுத்தம்

வாஷிங்டன் மூலமாக தெஹ்ரான் – டெல் அவிவ் இடையே ஒரு மூலோபாய – தந்திரோபாய (Tactical Ceasefire) யுத்த நிறுத்தம் ஏற்பட்டது போல் தெரிகிறது.

வளைகுடா போரில் ஃபோர்டோ மற்றும் நடான்ஸில் உள்ள ஈரானிய அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்காவின் சமீபத்திய வான்வழித் தாக்குதலான (ஆபரேஷன் மிட்நைட் ஹேமர்) நீண்டகாலப் போருக்கு வழிவகுக்கும் என்று முன்பு எதிர்பார்க்கப்பட்டது.

தொடர்ந்து தீவிரமாக வளர்ந்துவரும் மத்திய கிழக்கு நெருக்கடியில் அமெரிக்க தலையீடு காரணமாக போர் மேலும் தீவிரமடையும் என்றும் கூறப்பட்டது. கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மீது ஈரான் பழிவாங்கும் தாக்குதல்களையும், ஹைஃபா மற்றும் டெல் அவிவ் போன்ற இஸ்ரேலிய நகரங்கள் மீது தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களையும் ஈரான் தொடர்ந்து நிகழ்த்தி வருகிறது.

தற்போது வாஷிங்டன் மூலமாக தெஹ்ரான் – டெல் அவிவ் இடையே ஒரு மூலோபாய யுத்த நிறுத்தம் ஆனது, புவிசார் அரசியலில் தீவிர தருணத்தை உருவாக்கியுள்ளது. ஆனால் இந்த போர் நிறுத்தம் ஒரு பரந்த போரின் தொடக்கமா, அல்லது கவனமாக வடிவமைக்கப்பட்ட யுத்த நிறுத்த உத்தியா என்றும் ஊகங்கள் உள்ளன.

### 2003 ஈராக் படையெடுப்பு

2003 ஈராக் படையெடுப்புக்கு முந்தைய நிகழ்வுகளுடன் குறிப்பிடத்தக்க ஒற்றுமையை ஈரான் மீதான தாக்குதல் நிகழ்வுகளும் கொண்டுள்ளன. அன்றும், இன்றும், பேரழிவு ஆயுதங்கள், இஸ்ரேலிய தலைமையின் அழுத்தம் மற்றும் வாஷிங்டனில் உள்ள இஸ்ரேல் ஆதரவு அணிகளின் செல்வாக்கு முக்கிய பங்கு வகித்தன.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஈரானின் அணுசக்தி லட்சியங்களைப் பற்றி தொடர்ந்து எச்சரித்து வருகிறார். இது ஒரு காலத்தில் சதாம் உசேனின் அச்சுறுத்தலை அதிகரித்த சொல்லாட்சியை எதிரொலிக்கிறது.

இஸ்ரேலால் பல ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் கூறப்படும் இந்தக் கதை, ஈரானை இருத்தலியல் அச்சுறுத்தலாக நிலைநிறுத்தி தாக்கி அழிக்க வைத்துள்ளது.

2003 ஈராக் போரை ஆதரித்த பலரும் அடுத்தடுத்த அமெரிக்க நிர்வாகங்கள் மீது கடுமையான நிலைப்பாட்டை எடுக்க தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இருப்பினும், டொனால்ட் டிரம்பின் புதுப்பிக்கப்பட்ட அரசியல் எழுச்சியின் கீழ் தற்போதைய அமெரிக்க நிர்வாகம் மிகவும் வேறுபட்டது.

போர் சோர்வு, உள் பொருளாதார அழுத்தம் மற்றும் தலையீடு இல்லாததை ஆதரிக்கும் ஒரு அரசியல் இயக்கம் (MAGA) ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது.

### ஈரானின் வலிமையான வான்வழித் திறன்

அத்துடன் 2003 ஆம் ஆண்டு ஈராக்கைப் போலல்லாமல், ஈரான் ஒரு பலவீனமான அல்லது தனிமைப்படுத்தப்பட்ட நாடு அல்ல. அது வலிமையான வான்வழித் திறன்களை வளர்த்துக் கொண்டுள்ளது. இஸ்ரேலிய நகரங்கள் மீதான நேரடித் தாக்குதல்கள் இரும்புக் குவிமாடத்தின் செயற்றிறனை சவால் செய்து ஆயிரக்

தொடர்ச்சி▼




# டிரம்பின் தந்திரோபாய போர் நிறுத்தம்! இஸ்ரேல் - ஈரான் இணங்க சாத்தியமா?

**தொடர்ச்சி▲**

கணக்கான இஸ்ரேலியர்களை சைப்ரஸ் மற்றும் கிரேக்கத்துக்குத் தப்பி ஓட கட்டாயப்படுத்தியது. இஸ்ரேலின் வெல்லமுடியாத தன்மை பற்றிய கட்டுக்கதை பகிரங்கமாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஈரானின் அணுசக்தித் திட்டம் கணிசமான முன்னேற்றங்களைச் செய்துள்ளது. மேற்குலக நாடுகளின் பொருளாதார தடைகளால் பகுதியளவு சேதமடைந்தாலும், நாடு அதன் அறிவியல் முன்னேற்றத்தைத் தொடர்வதில் மீள்தன்மையைக் காட்டியுள்ளது.

**கட்டாரில் அமெரிக்க தளம் தாக்குதல்**

கடந்த சனிக்கிழமை இரவு அமெரிக்க விமானங்கள் ஈரானின் மூன்று அணுச் செறிவூட்டும் தளங்கள் மீது நடத்திய பெரும் தாக்குதல்களுக்குப் பதிலடியாகவே ஈரான் கட்டாரில் அமெரிக்கப் படைத்தளம் மீது ஏவுகணைகளை வீசியிருந்தது.

தனது மண்ணில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை அப்பட்டமான ஒரு அத்துமீறல் என்று குறிப்பிட்ட கட்டார் அரசு, ஈரானிய ஏவுகணைகளைத் தனது வான் காப்பு சாதனங்கள் மூலம் தடுத்து அழித்துவிட்டதாகக் குறிப்பிட்டிருந்தது.

ஈரானின் தாக்குதலால் அமெரிக்கப் படைவீரர்களுக்கோ படைத் தளத்துக்கோ எந்த வித சேதங்களும் ஏற்படவில்லை என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்திருக்கிறார். கட்டார் தளம் மீதான தனது தாக்குதல் பற்றி ஈரான் முன்கூட்டியே வோஷிங்டனுக்குத் தெரியப்படுத்தியிருந்தது என்ற தகவல் தற்சமயம் வெளியாகியுள்ளது.

கட்டாரில் அமைந்துள்ள அமெரிக்காவின் மிகப் பெரிய படைத்தளமாகிய அல் உதெய்த் தளம் மீது ஈரான் பால்ஸ்டிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்திய பின்னர் இந்தப் போர் நிறுத்த இணக்கப்பாடு பற்றிய அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

ஆனாலும் ஈரானின் பல பகுதிகள் மீது இஸ்ரேலின் தாக்குதல்கள் இன்னமும் நீடித்தன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

**காசிம் சுலைமானி படுகொலை**

2020 ஜனவரியில் ஈரானிய குட்ஸ் (QUDS) படைத் தளபதி காசிம் சுலைமானியை அமெரிக்கா படுகொலை செய்ததைத் தொடர்ந்து, இதேபோன்ற ஒரு குறிப்பிடத்தக்க தாக்குதல் நடந்தது. அமெரிக்க தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக, ஈரான் ஈராக்கில் உள்ள அய்ன் அல் – அசாத் விமானப்படைத் தளத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது. இந்தத் தளம் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள மிகப்பெரிய அமெரிக்க தளங்களில் ஒன்றாகும்.

2020 ஏவுகணைத் தாக்குதல் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு சேதத்தை ஏற்படுத்தியது என்றாலும்,







அமெரிக்க தரப்பில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. இதன் விளைவாக பெரும்பாலும் முன்கூட்டியே எச்சரிக்கைகள் மற்றும் வெளியேற்றம் காரணமாகும். ஒரு முழுமையான போரைத் தடுக்க தெஹ்ரான் வேண்டுமென்றே அமெரிக்க உயிரிழப்புகளைத் தவிர்த்தது என்றும் கூறலாம்.

ஆபரேஷன் மிட்நைட் ஹேமர்

அமெரிக்கா குண்டு வீச்சில் ஈரானில் உள்ள மூன்று அணுசக்தி நிலையங்களை கடந்த சனியிரவு தாக்கியதாக டிரம்ப் கூறியுள்ளார். ஃபோர்டோவ், நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹானில் உள்ள ஈரானிய அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கப் படைகள் “மிகவும் வெற்றிகரமான” தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

ஆபரேஷன் மிட்நைட் ஹேமர் தாக்குதல் செயல்திறன் மிக்கதாக இருந்ததாக என்ற ஊகங்கள் அதிகரித்து வருகின்றன. ஈரானுடன் ஒரு புதிய ஒப்பந்தத்திற்கான டிரம்பின் அடுத்தடுத்த அழுத்தம் இந்த தாக்குதலின் பின்னரே தொடங்கியது. மேலும் செனட்டர் ஜே.டி. வான்ஸின், நாங்கள் ஈரானுடன் சண்டையிடவில்லை, அதன் அணுசக்தி திட்டத்துடன் மட்டுமே போராடுகிறோம் போன்ற அறிக்கைகளை பார்த்தால் அமெரிக்க தற்போதைய போர் விவகாரத்தில் அழுத்தமாக காலடி எடுத்து வைக்க முடியவில்லை என்றே தோன்றுகிறது.



# இந்திய விமானப்படைக்கு அடுத்தாண்டில் 6 தேஜஸ் போர் விமானங்கள் விநியோகம்

இந்திய விமானப்படைக்கு அடுத்தாண்டில் 6 தேஜஸ் போர் விமானங்களை விநியோகம் செய்வோம் என எச்.ஏ.எல். நிறுவன தலைவர் டி.கே.சுனில் தெரிவித்துள்ளார்.

இந்திய விமானப்படையில் உள்ள மிக்-21 போர் விமானங்களுக்கு மாற்றாக எச்.ஏ.எல்.. நிறுவனத்திடமிருந்து 83 தேஜஸ் -1 ஏ போர் விமானங்களை 48,000 கோடி இந்திய ரூபா மதிப்பில் கொள்முதல் செய்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் கடந்த 2021 இல் ஒப்பந்தம் செய்தது. ஆனால் இந்திட்டத்தில் மிகவும் தாமதம் ஏற்படுவதாக இந்திய விமானப்படை தளபதி ஏ.பி.சிங் சமீபத்தில் அதிருப்தி தெரிவித்தார்.

இந்நிலையில் இது குறித்து எச்.ஏ.எல். நிறுவனத்தின் தலைவர் டி.கே.சுனில் அளித்த பேட்டியில்,

“தேஜஸ் போர் விமானம் விநியோகத்தில் தாமதம் ஏற்படுவதற்கு அமெரிக்காவின் ஜி.இ. ஏரோஸ்பேஸ் நிறுவனம் சரியான நேரத்தில் எப்404 ரக இன்ஜின்களை விநியோகிக்காததுதான் காரணம். 2023 ஆம் ஆண்டிலேயே அவர்கள் இன்ஜினை விநியோகித்திருக்க வேண்டும்.

ஆனால், இதுவரை ஒரே ஒரு இன்ஜினை மட்டுமே வழங்கியுள்ளனர். கொரோனா தொற்று காரணமாக விமான இன்ஜின் உற்பத்தியில் தாமதம் ஏற்பட்டது. அந்த நிறுவனத்துடன் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் ஜி.இ. நிறுவனம் 12 இன்ஜின்களை விநியோகம் செய்யும். எங்களிடம் 6 தேஜஸ் விமானங்கள் தயார் நிலையில் உள்ளது. அதனால் அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்குள் இந்திய விமானப் படைக்கு 6 தேஜஸ் விமானங்களை வழங்கிவிடுவோம்.

ஜி.இ. நிறுவனத்தின் இன்ஜின் விநியோகம் சீரடைந்ததும், வரும் ஆண்டில் 16 விமானங்களை தயாரிக்க எச்.ஏ.எல். நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தேஜஸ்-1ஏ போர் விமானம் உலகத்தரத்திலானது. இதில் நவீன ரேடார், எலக்ட்ரானிக் கருவிகள் உள்ளன. பல வகை ஏவுகணைகளை இதில் பயன்படுத்த முடியும். இது நமது விமானப்படைக்கு மிக சிறந்ததாக இருக்கும்.” என்று தெரிவித்துள்ளார்.

# மாநிலங்களவை எம்.பி.யாக அர்விந்த் கேஜ்ரிவால் மறுப்பு



பஞ்சாபில் காலியாகும் மாநிலங்களவை எம்.பி. பதவியை ஏற்க ஆம் ஆத்மி கட்சியின் அர்விந்த் கேஜ்ரிவால் மறுத்துள்ளார். இதனால், அதன் இடைத்தேர்தல் வேட்பாளர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

பஞ்சாப் மாநிலம் லூதியானா மேற்கு தொகுதியின் ஆம் ஆத்மி எம்.எல்.ஏ. குர்பிரீத் கோகி சமீபத்தில் காலமானார். இதையடுத்து அங்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் ஆம் ஆத்மி சார்பில் போட்டியிட்ட மாநிலங்களவை எம்.பி. சஞ்சீவ் அரோரா வெற்றி பெற்றுள்ளார். அவர் எம்.எல்.ஏ. பதவியை ஏற்க உள்ள நிலையில் மாநிலங்களவை எம்.பி. பதவி காலியாகிறது. இதனால், அந்த இடத்துக்கு இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த இடைத்தேர்தலில் போட்டியிடுமாறு ஆம் ஆத்மி தேசிய ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கேஜ்ரிவாலை அவரது கட்சியினர் வலியுறுத்துகின்றனர். ஆனால், இந்த வாய்ப்பை ஏற்க அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 2013 இல் டில்லியில் முதல் முறையாக ஆம் ஆத்மி ஆட்சி அமைந்தது முதல் தொடர்ந்து மூன்று முறை முதல்வராக கேஜ்ரிவால் பதவி வகித்தார். சமீபத்தில் நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தலில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்தது. அத்துடன், தான் போட்டியிட்ட தொகுதியிலும் தோல்வி அடைந்த கேஜ்ரிவால் இப்போது எந்தப் பதவியிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து டில்லியின் முன்னாள் முதல்வரான கேஜ்ரிவால் கூறும்போது, ‘நான் மாநிலங்களவைக்கு எம்.பி.யாக செல்ல விரும்பவில்லை. இப்பதவிக்கு யாரை அனுப்புவது என எங்கள் கட்சியின் அரசியல் ஆலோசனைக் குழு முடிவு செய்யும்.” என்றார்.





# காசாவில் உணவுக்காக காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் துப்பாக்கிச்சூடு; 25 பேர் உயிரிழப்பு

இஸ்ரேல் மீது கடந்த 2023 ஒக்டோபரில் ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து, காசாவில் அந்த அமைப்பினர் மீது இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியது. தற்போது ஈரானுடன் இஸ்ரேல் போரிட்டு வரும் நிலையிலும் காசாவில் தாக்குதலை தொடர்கிறது.

இந்நிலையில், மத்திய காசாவின் சலா அல்-தின் வீதியில் உணவுப் பொருளுக்காக காத்திருந்த நூற்றுக் கணக்கான பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலிப் படைகளும் ட்ரோன்களும் நேற்று காலையில் தாக்குதல் நடத்தின என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து நுசேரத் அகதிகள் முகாமில் அமைந்துள்ள அவ்தா மருத்துவமனை அதிகாரிகள் கூறும்போது,

“உணவுப் பொருள் லாரிகளை பாலஸ்தீனர்கள் நெருங்கிச் சென்றபோது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 25 பேர் இறந்தனர். 146 பேர் காயம் அடைந்தனர். இவர்களில் 62 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர். இவர்கள் காசாவில் உள்ள பிற மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.” – என்றனர்.

ஆனால், சந்தேகத்துக்கிடமான வகையில் தங்களை நோக்கி வந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு படைகள் கூறி வருகின்றன.

# ஈரான் மீதான அமெரிக்கத் தாக்குதல்களால் அணுசக்தி திட்டத்துக்கு சிறிய பின்னடைவு

## புலனாய்வு தகவல்களை மறுக்கிறது வெள்ளை மாளிகை



ஈரான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள், அதன் அணுசக்தி திட்டத்தில் சில மாதங்கள் மட்டுமே பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு புலனாய்வு நிறுவனம் தயாரித்த ஆரம்ப மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் கரோலின் லீவிட், இந்த அறிக்கை முற்றிலும் தவறானது என்று கூறுகிறார்.

இந்த நிலையில், ஈரானின் அணுசக்தி திறன் அழிக்கப்பட்டுள்ளதாக பென்டகன் வலியுறுத்துகிறது.

இதனிடையே, இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்தம் நீடித்து வருவதுடன் இரு தரப்பும் அதனை ஏற்றுக் கொண்டன.

இரு தரப்பினரும் போர் நிறுத்தத்தை மீறின என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னதாக குற்றஞ்சாட்டியிருந்த போதிலும், தற்போது இருதரப்பு போர் நிறுத்த விதிகளைக் கடைப்பிடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேலுக்காக உளவு பார்த்த மூவருக்கு தூக்குத் தண்டனை



இஸ்ரேலுக்காக உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு ஈரானில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்ட மூவரை, ஈரான் தூக்கிலிட்டதாக ஈரானிய நீதித்துறை செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரானுக்குள் சட்விரோதமாக ஆயுதங்களை கொண்டு செல்வதற்கு உதவியதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

பக்கங்கள் - 3

புதன்கிழமை 25/06/2025

உலகத் தமிழர்களை ஒன்றிணைத்த சோழக் கோப்பை; கனடா வெற்றி



C3



# ஐரோப்பிய ஒன்றியம் – கனடா புதிய பாதுகாப்பு ஒப்பந்தம்

ஐரோப்பிய ஒன்றியம் - கனடா இடையே புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமும், கனடாவும் தங்கள் மூன்றாவது இருதரப்பு உச்சிமாநாட்டின் போது, பாதுகாப்பு, தொழில்துறை மற்றும் டிஜிட்டல் வர்த்தகத்தில் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு புதிய பக்கத்தை தொடங்கியுள்ளன.

ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லெயன், ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அன்டோனியோ கோஸ்டா, கனடா பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் பிரசெல்ஸில் சந்தித்தனர்.

இந்த கூட்டத்தில் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கூட்டுறவு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இது, SAFE instrument மூலம் கனடாவும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து பாதுகாப்பு வாங்கும் செயல்களில் பங்கேற்க அனுமதிக்கிறது.







# புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்தும் சட்டத்தைக் கொண்டுவரும் கனடா

புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்த சட்டம் ஒன்றைக் கொண்டு வர கனடா அரசு திட்டமிட்டு வருகிறது.

சில புகலிடக் கோரிக்கைகளை கட்டுப்படுத்துதல் மற்றும், புலம்பெயர்தல் பரிசீலிப்பதை நிறுத்த அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் தொடர்பிலான ஒரு சட்டமூலத்தை கனடா அரசாங்கம் முன்வைத்துள்ளது.

கனடாவின் புலம்பெயர்தல் அமைச்சரான லீனா டயப் கூறும்போது, ’வலிமையான எல்லைகள்’ சட்டமானது, திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் குற்றங்களையும், சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள் நாட்டுக்குள் நுழைவதை கட்டுப்படுத்துவதையும், நாட்டின் புலம்பெயர்தல் அமைப்பின் ஒருமைப்பாட்டை

C2



# குப்பை கொட்டும் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்திய வம்சாவளிப் பெண் உடல்; காதலர் கைது





இந்திய வம்சாவளிப் பெண்ணொருவர் சில மாதங்களுக்கு முன் மாயமான நிலையில், அவரது உடல் குப்பை கொட்டும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விடயம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது..

கனடாவின் ஒன்றாறியோவிலுள்ள பர்லிங்டனில் வாழ்ந்துவந்த ஷாலினி சிங் (வயது 40) என்னும் இந்திய வம்சாவளியினரான பெண், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி தன் தாயான அனிதா சிங்கிடம் தொலைபேசியில் பேசியுள்ளார்.

அதற்குப் பிறகு அவர் மர்மமான முறையில் மாயமானார். சி.சி.ரி.வி. காட்சிகள் அவர் வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை என்பதை உறுதி செய்தன.

ஆகவே, அவர் வீட்டுக்குள் வைத்தே கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகம் ஏற்பட, அவர் வீட்டிலிருந்து வெளியே அனுப்பப்பட்ட குப்பைகள் கொட்டப்பட்ட இடத்தில் பொலிஸார் ஆய்வு மேற்கொள்ளத் துவங்கினார்கள்.

சந்தேகப்பட்டதுபோலவே, மே மாதம் 21ஆம் திகதி, அந்த குப்பை கொட்டும் இடத்தில் மனித உடல் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்த உடல் பாகங்கள் டி.என்.ஏ. பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில், கடந்த வெள்ளிக்கிழமையன்று, அவை ஷாலினியுடையவை என்பது உறுதியானது.

அதைத் தொடர்ந்து ஷாலினியின் காதலரான ஜெஃப்ரி ஸ்மித் (வயது 42) கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மீது கொலைக்குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஸ்மித் மீது ஏற்கனவே பல தாக்குதல் குற்றச்சாட்டுகள் உள்ளன.

மன நல காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த ஸ்மித்தை வெளியே விட எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையிலும், அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்ப்பு தெரிவித்த மருத்துவர்கள் மற்றும் நீதிமன்றம் எச்சரித்தது போலவே, அவர் மீண்டும் வன்முறையில் இறங்கியுள்ளார், ஒரு பெண்ணின் வாழ்வு அநியாயமாக பாதியிலேயே முடிவடைந்துவிட்டது.

# ஒன்றாறியோ, கியூபெக், நோவா ஸ்கோஷியா மாகாணங்களுக்கு வெப்ப நிலை எச்சரிக்கை



கனடாவின் கிழக்குப் பகுதிகளில் வெப்பம் தீவிரமடைந்து வரும் நிலையில், ஒன்றாறியோ, கியூபெக் மற்றும் நோவா ஸ்கோஷியா மாகாணங்களுக்கு வெப்ப எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

இது இந்த கோடை பருவத்தின் முதல் முக்கியமான வெப்ப அலை. இதனால் மக்களின் உடல்நலத்திற்கு ஆபத்து ஏற்படக்கூடும் என சுற்றாடல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

உங்களையும், பிறரையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும் – கடுமையான வெப்பநிலை அனைவரின் உடல்நிலையையும் பாதிக்கக்கூடும் என எச்சரித்துள்ளது.

மக்கள் கடுமையான வெப்பத்திலிருந்து தங்களை பாதுகாக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**ஐரோப்பிய ஒன்றியம்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்துடன், கனடாவின் பாதுகாப்பு தொழில்துறையும் எதிர்காலத்தில் இணையும் வகையில் புதிய ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

உக்ரைனுக்கு தொடர்ந்தும் ஆதரவு, ரஷ்யாவுக்கு எதிரான அழுத்தங்கள், மொல்டோவாவை பாதுகாப்பது போன்ற முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

காசா பகுதியில் தாக்குதலும், இஸ்ரேல்–ஈரான் இடையிலான பதற்றம் அதிகரிக்கக்கூடாது என்பதையும் இருபுறமும் வலியுறுத்தின.

ஊநுவுயு வர்த்தக ஒப்பந்தத்தின் வெற்றியை இருநாடுகளும் கொண்டாடின. இது மூலப்பொருள்கள் மற்றும் தொழில்துறையில் கூட்டு திட்டங்களை உருவாக்க வழிவகுக்கிறது. மேலும், Digital Trade Agreement மற்றும் யுஐ–யில் ஒத்துழைப்பு குறித்த பேச்சுவார்த்தைகளும் தொடங்க உள்ளன.

**புலம்பெயர்தலை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார்.

இந்த சட்டத்தின் மூலம், அமெரிக்காவுடனான கனடாவின் பகிரப்பட்ட எல்லையைக் கண்காணிக்க பொலிஸாருக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட உள்ளது.

இன்னொரு முக்கிய விடயம், இந்தச் சட்டம், கனடாவில் ஒரு வருடத்திற்கு மேலாக தங்கியிருப்பவர்கள் புகலிடம் கோருவதைத் தடுக்கக்கூடும்.

அதாவது, கனடாவுக்கு வந்தவர்கள், 14 நாள்களுக்குள் புகலிடம் கோரி விண்ணப்பிக்க வேண்டும்.

அப்படி விண்ணப்பிக்காமல், ஒரு வருடத்துக்கும் மேல் கனடாவில் தங்கியிருப்பவர்கள், அதற்குப்பின் புகலிடம் கோர தடை விதிக்கப்படுவதுடன், அவர்கள் நாடுகடத்தப்படவும் வாய்ப்புள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# உலகத் தமிழர்களை ஒன்றிணைத்த சோழக் கோப்பை; கனடா வெற்றி

2025 இற்கான பிரிமியர் கோல்ஃ விளையாட்டு போட்டியில் கனடாவின் தமிழ் கோல்ஃ வீரர்கள் அணி வெற்றியை தனதாக்கியுள்ளது.

உலகலாவிய ரீதியில் தமிழ் கோல்ஃப் வீரர்களை ஒன்றினைக்கும் சோழக் கோப்பையின் இரண்டாவது பருவம் வெற்றிகரமாக முடிவடைந்தது.

இதில் கனடா தமிழ் கோல்ஃப் வீரர்கள் அணி, பிரித்தானியாவின் தமிழ் கோல்ஃப் வீரர்கள் அணியை வீழ்த்தி வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் தமிழ் கோல்ஃ வீரர்கள் சங்கத்தின் தலைவர் ரதீசனின் பல நாள் கனவு தற்போது நிறைவேறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



கனடா அணியின் இந்த வெற்றி, குழுவினரின் நீடித்த பயிற்சி மற்றும் ஒற்றுமையினால் நிகழ்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு, துணைத் தலைவரின் நிலைத்தன்மை மற்றும் வழிகாட்டலுக்கு சிறப்பு நன்றி செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கு பிரதான ஆதரவளித்த புழுடக வுழுறு நிறுவனத்திற்கும் தமிழ் கோல்ஃப் வீரர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இந்த வெற்றி தமிழர் அடையாளத்தை உலகளவில் எடுத்துச் செல்லும் ஒரு பெரிய வெற்றியாக கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

